# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில்அருகில்), எல்டாம்ஸ்ரோடுசந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை 600 018. தொலைபேசி எண்: 24347590**

**<u>ஆணை நாள் – 25.02.2015</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

**<u>வழக்கு எண். 5808/F/2014</u>**

| | | |
|---|---|---|
| திரு. A.P. நாகேஸ்வரன்,<br>த/பெ. A.C. பெருமாள்,<br>சி–8/4, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அரசு ஊழியர் குடியிருப்பு, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை–600 050. | .. | மேல்முறையீட்டாளர் |
| பொதுத் தகவல் அலுவலர்/ மேற்பார்வைப் பொறியாளர் (கொள்முதல் மற்றும் நிர்வாகம்) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், எண்ணூர் அனல் மின் நிலையம், எண்ணூர், சென்னை–600 057. | .. | பொது அதிகார அமைப்பு |

*****

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று (25.02.2015) நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு. ஏ.பி.நாகேஸ்வரன் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு.என்.சடையப்ப வள்ளல், மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், எண்ணூர் அனல்மின் நிலையம் , சென்னை–57 ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மனுதாரர், 10.02.2014 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (25.02.2015) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 20.11.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனு மற்றும் 08.01.2014 அன்று சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் அவர் எண்ணூர் அனல்மின் நிலையத்தில் ஒப்பந்தத் தொழிலாளியாக 09.11.1992 முதல் 30.09.2002 வரை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை செய்து வந்ததாகவும், மின்வாரியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்காக வெளியிடப்பட்ட வாரிய ஆணையில் அவருடைய பெயர் விடுபட்டுவிட்டதாகக் கூறி, அது குறித்து ஆறு இனங்களுக்கான தகவல்களைக் கேட்டிருக்கிறார். குறித்துரைக்கப்பட்ட கால வரையறைக்குள் தகவல்கள் எதுவும் வழங்கவில்லை எனக்கூறி, சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 08.01.2014 அன்று முதல் மேல்முறையீடும், அதனைத் தொடர்ந்து, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 10.02.2014 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. மேல்முறையீட்டாளர் ஆணையத்திற்குத் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்றைய விசாரணைக்கு (25.02.2015) எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன்படியான மனுவிற்கு 07.12.2013 தேதியிட்ட கடிதம் வாயிலாக இடைக்கால பதில் அனுப்பப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து 01.09.2014ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாக 276 பக்கங்கள் அடங்கிய ஒளிநகல் அனுப்பப்பட்டதாகவும், மீதமுள்ள 123 பக்கங்களின் ஒளிநகல்களை இன்று மனுதாரருக்கு நேரில் வழங்கியதாகவும் தெரிவித்து அதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்திருக்கிறார். மனுதாரரும் தான் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களும் தனக்குக் கிடைக்கப்பெற்றன என்று ஒப்புதல் அளித்திருக்கிறார். ஆக, இந்த வழக்கைப் பொறுத்தவரை,

மனுதாரருக்கு அவர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களும் வழங்கப்பட்டுள்ள நிலையில், இதில் மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய வேறு அம்சங்கள் எதுவுமில்லை எனக் கருதி, இந்த மேல்முறையீடு இத்துடன் முடிக்கப்படுகிறது.

**ஒம்/– (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். 5808/F/2014**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/ மேற்பார்வைப் பொறியாளர்
(கொள்முதல் மற்றும் நிர்வாகம்)
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
எண்ணூர் அனல் மின் நிலையம்,
எண்ணூர், சென்னை–600 057.

**மேல்முறையீட்டாளர்**

திரு. A.P. நாகேஸ்வரன்,
த/பெ. A.C. பெருமாள்,
சி–8/4, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய
அரசு ஊழியர் குடியிருப்பு,
அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம்,
சென்னை–600 050.

*jb*